செய்தி வெளியீடு எண் : 78 நாள் : 28.09.2021

**தேனி மாவட்டம்**
**மாவட்ட அளவிலான குழந்தைகள் பாதுகாப்பு குழுக்கூட்டம்**
**மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. க.வீ.முரளீதரன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில்,**
**தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் என்.சுந்தரம் அவர்கள்,**
**மாவட்ட சட்ட பணிகள் ஆணைக்குழு செயலர் ராஜ்மோகன் அவர்கள்,**
**முன்னிலையில் நடைபெற்றது:-**

*****

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், மாவட்ட அளவிலான குழந்தைகள் பாதுகாப்பு குழுக்கூட்டம் இன்று (28.09.2021) மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. க.வீ.முரளீதரன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் என்.சுந்தரம் அவர்கள், மாவட்ட சட்ட பணிகள் ஆணைக்குழு செயலர் ராஜ்மோகன் அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளை பாதுகாத்தல், குழந்தை திருமணம் தடுப்பு, குழந்தை தத்து, குழந்தை தொழிலாளர் மீட்பு, பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு தேவைப்படும் குழந்தைகள், சட்டத்திற்கு முரண்பட்ட குழந்தைகள், கொரோனா தொற்றினால் பெற்றோரை இழந்த குழந்தைகளுக்கான முதலமைச்சரின் நிவாரண நிதி, பள்ளி செல்லா குழந்தைகள் போன்ற குழந்தைகளின் நலன் தொடர்பான செயல்பாடுகள் குறித்து விரிவாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இக்கூட்டத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது,

தமிழக அரசின் உத்தரவின்படி, காப்பகங்களில் உள்ள குழந்தைகளுக்கு தேவையான அரசின் நிதியினை பெற வங்கி கணக்கு துவங்கிடவும், குழந்தைகளுக்கு பிறப்பு சான்றிதழ் பெற்றிடவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளவும், காப்பகங்களுக்கு புதியதாக வரப்பெற்ற குழந்தைகள் மற்றும் பெற்றோர் அல்லது பாதுகாவலர்களுடன் சென்ற குழந்தைகளின் நிலையினை தொடர் ஆய்வு மேற்கொண்டு குழந்தைகளின் நலனை பாதுகாத்திட வேண்டும்.

மாவட்டத்தில் உள்ள அனைத்து குழந்தைகள் இல்லங்களில் உள்ள குழந்தைகளின் தகவல்களை இணையதளத்தில் பதிவேற்றம் செய்திட வேண்டும். இளைஞர் நீதி சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படும் குழந்தைகள் இல்லங்கள், உரிமம் பெறாமல் இயங்கும் குழந்தைகள் இல்லங்கள் தொடர்பாக புகார்கள் பெறப்பட்டால் உடனடியாக நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

கொரோனா நோய்த் தொற்றினால் தாய் அல்லது தந்தையை இழந்த குழந்தைகளோடு இருக்கும் தந்தை அல்லது தாய்க்கு உடனடி நிவாரணத் தொகையாக ரூ.3 இலட்சம் வழங்கும் திட்டத்தின் கீழ் மீதமுள்ள குழந்தைகளின் பெற்றோரின் வங்கி கணக்கில் வரவு வைத்திடவும், குழந்தைகள் இல்லங்களில் உள்ள குழந்தைகளுக்கு முதலமைச்சரின் மருத்துவக்காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் அடையாள அட்டைகள் வழங்கிடவும் நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

மேலும், அனைத்து பள்ளி மாணவ, மாணவியர்கள் மற்றும் பொதுமக்களிடையே குழந்தைகள் திருமணம் தடுப்பு சட்டம் மற்றும் தண்டனைகள் குறித்து போதிய விழிப்புணர்வு ஏற்படுத்திட வேண்டும். கிராம, ஊராட்சி, நகர, வட்டார அளவில் செயல்பட்டு வரும் குழந்தைகள் பாதுகாப்பு குழு குழந்தைகள் திருமணம் நடைபெறாமல் தடுப்பதற்கு முக்கிய பங்காற்றிட வேண்டும். மாவட்டத்தில் குழந்தை திருமணங்கள் நடைபெறாமல் முற்றிலுமாக தடை செய்திட தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்கள் மற்றும் காவல் துறையின் மூலம் குழந்தை திருமணங்களை தடுத்து, பெண் குழந்தைகளை தொடர்ந்து கண்காணித்திட வேண்டும் என தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், நீதித்துறை நடுவர் - இளைஞர் நீதிக்குழும தலைவர் திரு. பன்னீர்செல்வம் அவர்கள், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பிரவிண் உமேஷ் டோங்கரே, இ.கா.ப., தேனி அரசு மருத்துவக்கல்லூரி, மருத்துவமனை முதல்வர் மரு.பாலாஜிநாதன், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் சத்தியநாராயணன், தொண்டு நிறுவனங்களைச் சார்ந்த நிர்வாகிகள், குழந்தைகள் நல குழு உறுப்பினர்கள் மற்றும் குழந்தைகள் இல்ல நிர்வாகிகள் உட்பட அனைத்துத்துறை அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.**